# <u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திண்டுக்கல் பிரிவு அலுவலகத்தை அணுகி, தன்னுடைய தந்தையின் பெயரில் உள்ள விவசாய நிலத்திற்கான மின் இணைப்பை தன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்வதற்காக திண்டுக்கல் மாவட்டம், வேடசந்துார் உப கோட்டம், சேனன்கோட்டையில் உள்ள மின் வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு. ரவிக்குமார், இளநிலை பொறியாளர், சேனன்கோட்டை மின் வாரிய அலுவலகம், வேடசந்துார் உபகோட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ. 6,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 09.12.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு. ரவிக்குமார், இளநிலை பொறியாளர், புகார்தாரரிடமிருந்து ரூ.6,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Dindigul detachment, and gave complaint that he had applied for name transfer of Agriculture Electricity connection from his father's name to his name at Dindigul District, Vedasandur Sub Division, Senankottai Electricity Office, for which Tr.Ravikumar, Junior Engineer, Senankottai Electricity Office, Vedasandur Sub Division, Dindigul District demanded Rs.6,000/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today 09.12.2021.

During trap proceedings, the accused Tr. Ravikumar, Junior Engineer, reiterated his earlier demand and received the bribe amount of Rs.6,000/- from the complainant. The accused was arrested.